[1990 சனவரி 22

கோவில்பட்டி தாலுக்காவுடன் சில இராமங்களைச் சேர்த்தல்.

*521—திரு. சோ. அழகர்சாமி : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருநெல்வேலி—கட்டபொம்மன் மாவட்டம், சங்கரன் கோவில் தாலுக்கா இளயரசனேந்தல் பிர்க்காவைச் சேர்ந்த சில கிராமங்களை சிதம்பரனார் மாவட்டம் கோவில்பட்டி தாலுக்காவுடன் சேர்க்க கோரிக்கை அரசுக்கு வந்துள்ளதா ?

(ஆ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி.மனோகரன்; மாண்புமிகு தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. சோ. அழகர்சாமி; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த கேள்வி சம்பந்தப்பட்ட கோவில்பட்டியை ஒட்டியுள்ள கிராமங்களிலுள்ள மக்கள் ஏதாவது ஒரு சான்று பெற வேண்டுமென்றாலோ அல்லது அரசாங்க அலுவலர்களைச் சந்திக்க வேண்டுமென்றாலோ ஐந்து மைல் தொலைவில் உள்ள கோவில்பட்டிக்கு வந்து, அங்கிருந்து 30 கி. மீ. தொலைவில் உள்ள சங்கரன்கோவிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. சாதாரணமாக ஒரு சான்று பெற வேண்டுமென்றாலும் மாணவர்கள் கூட தாலுகா அலுவலகத்திற்குச் செல்ல கோவில்பட்டி வந்துதான் செல்ல வேண்டியிருக்கிறது. இப்படி கடுமையான கஷ்டத்திற்குள்ளாகி இருக்கிற அந்த மக்களுடைய கோரிக்கை நியாயமான கோரிக்கையாகும். சென்ற பட்ஜெட் தொடரின் போது ஒரு கேள்விக்கு பதில் அளிக்கும் போது, சீக்கிரம் அறிவிப்பேன் என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். அந்தப் பகுதி மக்கள் எல்லாவிதமான அலுவலர்களையும் அணுக வேண்டு என்றாலும் நெல்லை அல்லது சங்கரன்கோவிலுக்குச் செல்ல வேண்டியிருக்கிறது. எனவே, அந்த மக்களுடைய கோரிக்கையை உடனடியாக நிறைவேற்றி தந்து, அவர்களுடைய கஷ்டத்தைப் போக்க அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன்; மாண்புமிகு தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், மரியாதைக்குரிய அழகர்சாமி அவர்கள் எழுப்பிய கோரிக்கையின் மீது சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின்

அறிக்கை கோரப்பட்டுள்ளது. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் அவர்களின் முடிவான அறிக்கை இன்னும் அரசிற்குக் கிடைக்கப் பெறவில்லை.

திரு. சோ. அழகர்சாமி ; மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாவட்ட ஆட்சித் தலைவரின் அறிக்கைகள் அரசுக்கு வந்து விட்டதாக நான் சமீபத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களைக் கேட்டபோது சொன்னார்கள். அது சம்பந்தப்பட்ட நம்பர் கூட வாங்கிக் கொண்டு வந்திருக்கிறேன். ஆகவே, அந்தத் தகவல்கள் எல்லாம் வந்து விட்டன. சங்கரன்கோவில், விளாத்திகுளம், கோவில்பட்டி ஆகிய இந்த மூன்று தாலுக்காக்களும் அதிகமான கிராமங்களைக் கொண்டுள்ள தாலுக்காக்களாக இருப்பதால், நிர்வாக வசதிகள் குறைவாக இருக்கின்றன என்று அதனை நான்காகப் பிரித்து எட்டையபுரத்தைத் தலைநகராகக் கொண்ட ஒரு தாலுக்காவும், விளாத்திகுளம் தாலுக்காவிலிருந்து சில கிராமங்களையும், கோவில்பட்டி தாலுக்கா இருந்து சில கிராமங்களையும் இணைத்து எட்டையபுரத்தைத் தலைமையாகக் கொண்ட ஒரு தாலுக்காவும், கோவில்பட்டியை ஒட்டியுள்ள சங்கரன்கோவில் தாலுக்காவைச் சார்ந்திருக்கிற சில கிராமங்களை கோவில்பட்டி தாலுக்காவுடன் இணைத்தும் இந்தத் தாலுக்காக்களை அமைப்பதாக ஏற்கனவே அரசிடத்தில் ஒரு முடிவு இருந்ததாக நான் கேள்விப்படுகிறேன். அதைத் துரிதப்படுத்தி அந்த மக்களுக்கு இந்த வசதிகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்படுத்தித் தருவார்களா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. நாஞ்சில் கி. மனோகரன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொடர்புடைய அமைச்சருக்குக் கிடைக்காத தகவல்கள் மாண்புமிகு திரு. அழகர்சாமி அவர்களுக்குக் கிடைத்திருப்பதைப் பற்றி எண்ணிப் பார்க்கிறபோது மகிழத் தோன்றுகிறது, சிரிக்கவும் தோன்றுகிறது. (சிரிப்பு) கடைசியாக நான் அவருக்குச் சொல்கிற பதில், 1991 ஆம் ஆண்டிற்கான மக்கள் தொகைக் கணக்கெடுப்பின் காரணமாக மாவட்டம், வட்டம் மற்றும் வருவாய் கிராமங்களின் ஆட்சி வரம்பிலே மாற்றம் செய்ய 1991 ஜுன் திங்கள் வரையில் தடையாணை உள்ளது. எனவே, இந்த கோரிக்கை அரசுக்கு பரிந்துரைக்கப்பட்டாலும், 1991 ஜுன் திங்களுக்குப் பின்தான் அதை அரசுக்கு கருத இயலும் அல்லது செயல்படுத்த இயலும்.

9-35 மணி

திரு. தி. ரா. மாசிலாமணி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, செங்கை-அண்ணா மாவட்டத்தில் அடங்கிய......

(மணியடிக்கப்பெற்றது)